[பேரவைத் தலைவர்] [2005 செப்டம்பர் 29

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(உ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2005), மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2005)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

(ஊ) தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2005), மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2005)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

@ 23-9-2005 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு சிறப்பு அரசிதழில்*** வெளியிடப்பெற்றுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2005 செப்டம்பர் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இரண்டு சட்டமுன்வடிவுகளையும் ஒருங்கே சேர்த்து ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாம். இந்தச் சட்டமுன்வடிவுகளின்மீது பேச விரும்புவோர் மிகவும் சுருக்கமாகப் பேச வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். யாராவது பேசுகிறீர்களா?*

திரு. அ.இரா. மலையப்பசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் அறிமுகம் செய்யப்பட்ட தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டமுன்வடிவில், இந்தச் சட்டமுன்வடிவிற்கான நோக்கக் காரண விளக்க உரை புரிந்துகொள்ளும் வகையில் தரப்படவில்லை. மேலும், சட்டமுன்வடிவில் கூறப்பட்டுள்ள* HDPE / PP, LDPE *பற்றிய பொருள்கள் எதற்காகப் பயன்படுகின்றன என்ற விவரங்களும் கூறப்படவில்லை. ஏற்கெனவே உள்ள பட்டியலில் சில பொருட்களைச் சேர்ப்பதால் இந்தப் பொருட்கள் வரி விதிப்பிற்கு உள்ளாகின்றனவா அல்லது வரி விலக்குப் பெறுகின்றனவா என்ற விவரங்களும் தரப்படவில்லை.*

மேலும், உரம் மற்றும் சிமெண்ட் முதலிய பொருட்களை packing *செய்யும் பிளாஸ்டிக் பைகள் தயாரிக்கும் பிளாஸ்டிக் துணிகள் மற்றும் அதன் பைகள் தயாரிக்கும்போது ஏற்படும் துண்டுத் துணிகள், கழிவுகள்,* waste *ஆகியவை இதுநாள்வரை வரி விதிக்கப்படாமல் உள்ளன. அதற்குப் பதிலாக விற்பனை வரி விதிக்கின்ற வகையில் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்தப் புதிய சட்டத்தினால் அரசுக்கு சுமாராக ஆண்டுக்கு என்ன வருவாய் வரவுள்ளது என்ற விவரமும் இந்தப் பொருட்கள் இதுநாள்வரை எந்த வரி விதிப்பில் இருந்தன? தற்போது இந்தச் சட்டத் திருத்தம் செய்வதால் என்ன வரி மாற்றம் ஏற்படப் போகிறது என்ற விவரங்களும் இந்தச் சட்டத் திருத்தத்தில் இல்லை. இந்த விவரங்கள் இல்லாமல் இந்தச் சட்டமுன்வடிவு சட்டப்பேரவையில் அறிமுகப்படுத்தப்படுவதை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக எதிர்க்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறீர்களா? (குறுக்கீடு) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் "2005 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2005) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்" என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

பிற்பகல் 12–05

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2005) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஊ) தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் "2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2005) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்" என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2005) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஏ) தமிழ்நாடு ஊராட்சிகள் இரண்டாம் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2005).

திரு. வி.கே. லட்சுமணன் மற்றும் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் ஆகியோரில் ஒருவர் "11–7–2005 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 2/2005) இப்பேரவை நிராகரிக்கின்றது" என்னும் தீர்மானத்தை முன்மொழிவார். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS